**நடப்பு நிகழ்வுகள் - செப்டம்பர் 11,12 -2016**

1. 2016 அமெரிக்க ஓபன் பெண்கள் ஒற்றையர் டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்றவர் யார் ?
A. செரீனா வில்லியம்ஸ்
B. வீனஸ் வில்லியம்ஸ்
C. ஏஞ்சலிக் கெர்பர்
D. கரொலினா பிளிஸ்கோவா

**விடை : C. ஏஞ்சலிக் கெர்பர்**

ஏஞ்சலிக் கெர்பர் , ஜெர்மனியின் புகழ்பெற்ற டென்னிஸ் வீரர். 2016 அமெரிக்க ஓபன் பெண்கள் ஒற்றையர் டென்னிஸ் இறுதிப் போட்டியில், செக் குடியரசின் கரொலினா பிளிஸ்கோவாவை 6-3, 4-6, 6-4 என்ற செட் கணக்கில் தோற்கடித்து பட்டம் பெற்றார். இந்நிலையில், கடைசியாக 1996-ல் ஸ்டெஃபி கிராஃப்புக்கு அடுத்து வெற்றி பெரும் முதல் ஜெர்மனி வீரர் பெருமையை இவர் பெறுகிறார்.

2. செபியிடம் Initial Public Offering (IPO)யை தாக்கல் செய்துள்ள முதல் இந்திய பங்குச் சந்தை எது ?
A. National Commodity & Derivatives Exchange (NCDEX)
B. Multi Commodity Exchange of India (MCX)
C. Bombay Stock Exchange (BSE)
D. National Stock Exchange (NSE)

**விடை : C. Bombay Stock Exchange (BSE)**

ஆசியாவின் பழமையான பங்குச்சந்தையான மும்பை பங்குச் சந்தை (பிஎஸ்இ) , செபியிடம் (Securities and Exchange Board of India) Initial Public Offering (IPO)யை தாக்கல் செய்துள்ளது. IPO என்பது, பங்குச்சந்தை பங்குகளை வழக்கம் போல் நிறுவன முதலீட்டாளர்களுக்கு மட்டும் விற்காமல், சாதாரண பொதுமக்களுக்கும் பங்குகள் விற்கப்படும் என்பதாகும்.

3. வரி செலுத்துவோரின் குறைகளை ஆன்லைன் வழியே நிவர்த்தி செய்ய "e-nivaran" எனும் புதிய தளத்தினை நிறுவியுள்ள துறை எது ?
A. Reserve Bank of India (RBI)
B. Securities and Exchange Board of India (SEBI)
C. Central Board of Direct Taxes (CBDT)
D. Central Board of Excise and Customs (CBEC)

**விடை : C. Central Board of Direct Taxes (CBDT)**

வரி செலுத்துவோரின் குறைகளை ஆன்லைன் வழியே நிவர்த்தி செய்ய "e-nivaran" எனும் புதிய தளத்தினை Central Board of Direct Taxes (CBDT) துறை அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் ரீபண்ட், ITRs, நிரந்தர கணக்கு எண் முதலியன தொடர்பான குறைகளை கூறலாம். இம்முயற்சியின் ஒரு பகுதியாக, IT துறை தொடர்பான புகார் போது ஏற்படும் தொல்லைகளை குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. வரி செலுத்துவோர் தங்கள் தனிப்பட்ட கணினி மூலம் குறைகளை பதிவு செய்யலாம். புகார் பதிவு செய்யப்பட்டதும், ஒப்புகை எண் ஒன்று வழங்கப்படும். இதனை கொண்டு, புகாரின் முன்னேற்றத்தை கண்காணிக்க முடியும். எதிர்காலத்தில் வரி தொடர்பான தகவல்கள்பெற இந்த எண் உதவும்.

4. 2016 இந்திய-அமெரிக்க பொருளாதார உச்சிமாநாடு பின்வரும் எந்த நகரங்களில் நடைபெற உள்ளது ?
A. புது தில்லி
B. நியூயார்க்
C. வாஷிங்டன் DC
D. மும்பை

**விடை : A. புது தில்லி**

இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை அதிகரிக்க செப்டம்பர் 14ல் புது தில்லியில் 2016 இந்திய-அமெரிக்க பொருளாதார உச்சி மாநாடு நடைபெற உள்ளது. இந்த 2 நாள் மாநாட்டினை இந்தியாவிற்கான அமெரிக்கா தூதர் ரிச்சர்ட் வர்மா துவங்கிவைப்பார். ஏற்கனவே உள்ள இரு-வழி வர்த்தகமானது $ 500 பில்லியன் அளவிற்கும் மற்றும் இன்ன

பிற துறைகளில் வளர்ச்சியை அதிகரிக்கவும் கவனம் செலுத்தப்பட உள்ளது .

5. புதிதாக நியமிக்கப்பட்ட கஜகஸ்தான் பிரதமர் யார்?
A. பைகைஷன் சாகிண்டயேவ்
B. டரிங்கா நஜார்பயேவ்
C. கரீம் மாசிமோவ்
D. நூர்சுல்தான் நஜார்பயேவ்

**விடை : A. பைகைஷன் சாகிண்டயேவ்**

பைகைஷன் சாகிண்டயேவ், ஒரு ஆசிரியர் மற்றும் பொருளாதார வல்லுநர். கஜகஸ்தான் குடியரசின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அந்நாட்டின் ஜனாதிபதி நூர்சுல்தான் நஜார்பயேவ்-ஆல் நியமனம் செய்யப்பட்டார்.

6. எந்த மாநில அரசு AIR Regional News Unit (RNU)-ன் அதிகாரபூர்வ முகநூல் பக்கத்தை துவங்கியுள்ளது ?
A. ஒடிசா
B. சத்தீஸ்கர்
C. ஜார்க்கண்ட்
D. உத்தரப் பிரதேசம்

**விடை : B. சத்தீஸ்கர்**

சத்தீஸ்கர் அரசு, ராய்ப்பூர் வானொலி நிலையத்திலிருந்து AIR Regional News Unit (RNU)-ன் அதிகாரபூர்வ முகநூல் பக்கத்தை துவங்கியுள்ளது. இப்பக்கத்தில் சத்தீஸ்கரி மாநில மக்களின் சமூக வாழ்க்கை பற்றிய புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் பகிரப்படும்.அது தவிர மாநில நிகழ்வுகளை அறிய இப்பக்கம் உதவும்.

7. 2016 அமெரிக்க ஓபன் ஆண்கள் ஒற்றையர் டென்னிஸ் போட்டியில் வென்றவர் யார் ?
A. ரபேல் நடால்
B. ஆண்டி முர்ரே
C. ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரிங்கா
D. நோவக் ஜோகோவிக்

**விடை : C. ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரிங்கா**

வாவ்ரிங்கா, சுவிஸ் டென்னிஸ் வீரர். இவர் 2016 அமெரிக்க ஓபன் ஆண்கள் ஒற்றையர் டென்னிஸ் இறுதி போட்டியில் ஜோகோவிக்-ஐ 6-7, 6-4, 7-5, 6-3 என்ற கணக்கில் தோற்கடித்து வெற்றி பெற்றார் . இது இவருக்கு முதல் US ஓபன் வெற்றி மற்றும் 3-வது பெரிய பட்டம்.

8. கண்ணுக்குள் ரோபோ அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக நிகழ்த்திய உலகின் முதல் நாடு எது ?
A. அமெரிக்கா
B. சீனா
C. ஐக்கிய ராஜ்யம் (UK )
D. ஜெர்மனி

**விடை : C. ஐக்கிய ராஜ்யம் (UK )**

உலகின் முதல் ரோபோ அறுவை சிகிச்சை மனித கண்ணின் உள்ளே வெற்றிகரமாக பிரிட்டிஷ் அறுவை சிகிச்சைமருத்துவர்கள் மூலம் நிகழ்த்தப்பட்டது. முக்கியத்துவம் வாய்ந்த புரட்சிகரமான இந்த அறுவை சிகிச்சையை பல்வேறு சூழ்நிலைகளை தாண்டி செய்து முடித்தனர். அறுவை சிகிச்சை ஆக்ஸ்போர்டு ஜான் ராட்க்ளிஃப் மருத்துவமனையில் நடத்தப்பட்டது.

9. 2016 IUCN உலக பாதுகாப்பு மாநாட்டின் மையக்கருத்து என்ன ?
A. Planet at the Crossroads
B. Save Planet, Save Trees
C. Make Planet peaceful
D. Develop peace on planet

**விடை : A. Planet at the Crossroads**

2016 International Union for Conservation of Nature (IUCN)-ன் உலக பாதுகாப்பு மாநாட்டை ஹவாயின் Honolulu நடத்தியது. 2016 IUCN மாநாட்டின் நோக்கம், இயற்கை பாதுகாப்பு மற்றும் இயற்கை பாதுகாப்பில் ஏற்படும் உலக சவால்களை படிக்க புதுமையான அணுகுமுறைகளை உருவாக்குதல். 2016

IUCN மாநாட்டின் மையக்கருத்து Planet at the Crossroads ஆகும்.

10. “The Girls” என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?

A. ஜே கே. ரவ்லிங்

B. எம்மா கிளைன்

C. எம்மா ஹீலே

D. லீனா டன்ஹாம்

**விடை : B. எம்மா கிளைன்**

“The Girls” என்ற புத்தகம் எம்மா கிளைன் என்பவரால் எழுதப்பட்டது. ஒரு இளம் பெண் இந்த பரபரப்பான உலகால் எவ்வாறு உறிஞ்சப்படுகிறாள் என்ற திகிலூட்டும் கதையை கூறுகிறது.